வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : வீரமணி

தேதி 31.03.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்பு செய்திகள்

நாட்டின் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வதில் அணுமின் சக்தி முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ரம்ஜான் பண்டிகை நாடு முழுவதும் இன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

மருத்துவ கட்டமைப்பு வசதிகள் இதுவரை இல்லாத அளவிற்கு மேம்படுத்தப்பட்டு உள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.

டாக்டர் அம்பேத்கரின் ஜனநாயக கொள்கைகளை நிறைவேற்றுவதில் பிரதமர் திரு மோடி தலைமையிலான அரசு உறுதி பூண்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

*பிரதமர்* (6)

நாட்டின் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வதில் அணுமின் சக்தி முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நிலைத்தன்மையிலும், எரிசக்தியில் தற்சார்பை நோக்கிய இந்தியாவின் பயணத்தில் அணுசக்தியின் முக்கிய பங்கு குறித்து மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங்கின் ஆழந்த கருத்துக்களை பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டி, வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இவ்வாறு கூறியுள்ளார்.

*ரம்ஜான்* (19)

ரம்ஜான் பண்டிகை நாடு முழுவதும் இன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது. புதுச்சேரியிலும் இன்று ரம்ஜான் பண்டிகை வெகு விமர்சையாக கொண்டாடப்படடது. இதுகுறித்த செய்தித் தொகுப்பு

(வாய்ஸ்)

இஸ்லாமியர்களின் முக்கிய பண்டிகையான இந்த ரம்ஜான் பண்டிகை புனித மாதமான ரமலான் மாதத்தில் நோன்பினை கடைபிடித்து கொண்டாடப்படும் பண்டிகையாகும். ஏழைகளின் பசியை உணரும் வகையிலும், செல்வம் இருப்பவர்கள், இல்லாதவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்பதனை உணர்த்தும் வகையிலும் இறைவனை இரவு பகல் பாராமல் தொழுது வணங்குவது என்ற அடிப்படையில் கடந்த 30 நாட்களாக நோன்பு மேற்கொண்டு, பிறை தெரிந்ததை தொடர்ந்து இன்று ரம்ஜான் பண்டிகையை இஸ்லாமியர்கள் சிறப்பாக கொண்டாடினர்.

புதுச்சேரி கடற்கரை காந்தி திடலில் நடைபெற்ற சிறப்பு தொழுகையில் ஆண்கள், பெண்கள், சிறுவர் சிறுமியர் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான இஸ்லாமியர்கள் பங்கேற்றனர். பின்னர் ஒருவருக்கு ஒருவர் கட்டித் தழுவி ரம்ஜான் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர். இதேபோல், புதுச்சேரியில் உள்ள அகமதியா பள்ளி வாசல், மீரா பள்ளி வாசல், சுல்தானியா பள்ளி வாசல் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட பள்ளி வாசல்களிலும், சிறப்பு தொழுகை நடைபெற்றது. சுல்தான்பேட்டையில் உள்ள ஈத்கா பள்ளி வாசல் மைதானத்தில் நடைபெற்ற சிறப்பு தொழுகையில் ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் கலந்து கொண்டு தொழுகை செய்து ரம்ஜான் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

*அமித் ஷா* (11)

மருத்துவ கட்டமைப்பு வசதிகள் இதுவரை இல்லாத அளவிற்கு மேம்படுத்தப்பட்டு உள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா கூறியுள்ளார். இன்று அவர் அரியானா மாநிலம் இசாரில் உள்ள மகராஜா அக்ரசென் மருத்துவ கல்லூரியில் புதிதாக கட்டப்பட்ட தீவிர சிகிச்சை பிரிவு கட்டிடத்தை திறந்து வைத்து பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார். இந்த மருத்துவ கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மகாராஜா அக்ரசெனின் பிரமாண்ட சிலையையும் திறந்து வைத்து, முதுகலை

விடுதிக்கும் அவர் அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியின் போது, அரியானா மாநில முதலமைச்சர் திரு நயாப் சிங் சைனி, சுகாதாரத்துறை அமைச்சர் செல்வி. ஆர்த்தி ராவ், பொதுப்பணித்துறை அமைச்சர் ரன்வீர் கங்வா, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*நிர்மலா சீதாராமன்*(9)

புதுடெல்லியில் நாளை நடைபெற உள்ள நிகழ்ச்சியில் நிதி ஆயோக் அமைப்பு, பயன்பாட்டு பொருளாதார ஆராய்ச்சிக்கான தேசிய குழுமத்துடன் இணைந்து உருவாக்கி உள்ள மாநிலங்களுக்கான பொருளாதார மண்டல இணையதளத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தொடங்கி வைக்கிறார். இந்த இணையதளத்தின் மூலம் 1990-91 முதல் 2022-23 வரை, சுமார் 30 ஆண்டுகளுக்கான, மாநில நிதிசார் சூழல் அறிக்கைகள், தரவுக் களஞ்சியங்கள், மாநில நிதி பொருளாதார தகவல்கள், நிதி மேலாண்மையின் ஆய்வுத் தகவல்கள், உள்ளிட்ட முக்கிய கூறுகளை அறிந்து கொள்ள முடியும்.

*காஷ்மீர்* (19)

காஷ்மீருக்கான முதல் வந்தே பாரத் விரைவு ரயிலை பிரதமர் திரு நரேந்திர மோடி ஏப்ரல் மாதம் 19 ஆம் தேதி கத்ராவில் இருந்து தொடங்கி

வைக்க உள்ளார். 272 கிலோ மீட்டர் நீளம் உள்ள உதம்பூர், ஸ்ரீநகர், பாராமுல்லா ரயில் இணைப்பு பாதைகள் நிறைவடைந்ததை குறிக்கும் வகையில் இந்த புதிய வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் இயக்கப்படுகிறது. இதுகுறித்து நேற்று செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் திரு ஜிதேந்திர சிங், உலகின் மிக நீளமான ரயில் பாலத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி பார்வையிட்டு, அதை திறந்து வைப்பார் என்றும்,அதன்பிறகு கத்ராவில் இருந்து வந்தே பாரத் ரயிலை கொடியசைத்து துவக்கி வைப்பார் என்றும் தெரிவித்துள்ளார். ஜம்மு ரயில் நிலையம் புதுப்பிக்கப் பட்டு வருவதால் இந்த சேவை ஆரம்ப கட்டமாக கத்ராவில் இருந்து இயக்கப் படும் என்றும் தெரிவித்தார். 1997 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த ரயில் திட்டம், பல தாமதங்களை கடந்து தற்போதுதான் பயன்பாட்டிற்கு வந்துள்ளது குறிப்பிடத் தக்கது. இந்த ரயில் பாலத்தில் 38 சுரங்கப்பாதைகள், 927 பாலங்கள், ஈபிள் கோபுரத்தை விட உயரமான ஆயிரத்து 315 மீட்டர் நீளமுள்ள செனா பாலம் ஆகியவை இதில் அடங்கும். இந்த ரயில் ஜம்முவிற்கும்-ஸ்ரீநகருக்குமான பயண நேரத்தை கணிசமாக குறைத்து இந்த பகுதிக்கான இணைப்பை மேம்படுத்தும் என ரயில்வேத் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

முருகன் (9)

டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கரின் சமத்துவம் மற்றும் ஜனநாயக கொள்கைகளை நிறைவேற்றுவதில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு உறுதி பூண்டுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார். பிரதமர் திரு நரேந்திர மோடி மகராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் உள்ள தீக்ஷ பூமியில் உள்ள புத்தர் கோவிலில் மெழுகுவர்த்தி ஏந்தி வழிபட்டதை தமது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள டாக்டர் எல் முருகன் நம் ஒவ்வொருவரின் கண்ணியத்தையும், மேன்மையையும் கருத்தில் கொண்டு டாக்டர் அம்பேத்கர் அரசியல் சாசனத்தை எழுதியதாக குறிப்பிட்டுள்ளார்.

கிஷன் ரெட்டி (14)

கிராமப்புற இளைஞர்கள் புத்தாக்க தொழில்களில் ஈடுபட முன்வர வேண்டும் என்று மத்திய நிலக்கரி துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி வலியுறுத்தி உள்ளார். ஐதராபாத்தில் இன்று வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான தொழில் முனைவோர் அலுவலகத்தை திறந்து வைத்து பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு இளைஞர்களுக்கு புதிய தொழில்களை தொடங்குவதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வருவதாக கூறினார். தற்போது

தொடங்கப்பட்டுள்ள வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான தொழில் முனைவோர் அலுவலகத்தின் மூலம் இளைஞர்களுக்கான உதவிகள் மட்டும் அன்றி, பயிற்சி மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் திரு கிஷன் ரெட்டி தெரிவித்தார். 2047 ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற இலக்கை எட்டுவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் தேவை என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.

*அனுபிரியா* (14)

புற்றுநோய் பாதிப்பு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டும் என மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி அனுபிரியா பட்டேல் கூறியுள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற BISICON – 2025 மாநாட்டில் உரையாற்றிய அவர், ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் இதுவரை 150 மில்லியன் பெண்களுக்கு மார்பக புற்றுநோய் பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மேலும் அவர், நாடு முழுவதும் 200 பகல் நேர புற்றுநோய் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். ஆரோக்கியமான வாழ்க்கை முறை, விழிப்புணர்வு, சரியான நேரத்தில் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சை ஆகியவை மார்பக புற்றுநோய் இறப்பு

விகிதத்தை குறைக்க உதவும் என்று அவர் வலியுறுத்தினார். விழிப்புணர்வு இல்லாததால் இந்த நோய் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக தெரிவித்த திருமதி அனுபிரியா பட்டேல், மத்திய அரசு இதனை சமாளிப்பதில் அக்கறை கொண்டுள்ளதாகவும் கூறினார்.

*மியான்மர்* (13)

நிலநடுக்கத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள மியான்மர் நாட்டுக்கு இந்தியாவில் இருந்து அனுப்பப்பட்ட தேசிய பேரிடர் மீட்பு படையினர் U Hla Thein புத்த மடாலயத்தில் மீட்பு பணிகளை தொடங்கி உள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இப்பகுதியில் 170 க்கும் மேற்பட்ட புத்த துறவிகள் சிக்கியுள்ளதாக கூறப்பட்டதை தொடர்ந்து, மீட்பு பணிகள் துரிதப்படுத்தப் பட்டுள்ளன. இந்திய படையினர் மருத்துவமனைகளுக்கு சென்று தேவையான மருத்துவ உதவிகளை நாளை முதல் வழங்க உள்ளதாகவும், தெரிவிக்கப் பட்டுள்ளது. ஆபரேஷன் பிரம்மா திட்டத்தின் கீழ், மியான்மர் சென்றுள்ள இந்திய பேரிடர் மீட்பு படையினர் ஸ்கை வில்லா பகுதிக்கு சென்றுள்ளதாகவும், அப்பகுதியில் நிலநடுக்கத்தினால் இடிந்து விழுந்துள்ள 11 மாடிகளை

கொண்ட 4 கட்டிடங்களில் மீட்பு பணிகளை தொடங்கி உள்ளதாகவும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*ஏனாம்* (13)

ஏனாமில் உள்ள நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தொழிற்பயிற்சி நிலையத்தின் சார்பில் நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது. தொழிற்பயிற்சி நிலையத்தின் முதல்வர் திரு கிருஷ்ணாசுதாகர் இன்று ரீஜென்சி ஜூனியர் கல்லூரியில் இந்த முகாமினை தொடக்கி வைத்து பேசுகையில், சமூக சேவை நடவடிக்கைகளின் மூலம் மாணவர்களின் தலைமைத்துவ பண்புகளை மேம்படுத்த முடியும் என்றார். இந்த ஒரு வார கால முகாமில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளதாக எமது ஏனாம் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக, இன்று ரம்ஜான் பண்டிகையை ஒட்டி, ஏனாமில் உள்ள மசூதியில் நடைபெற்ற சிறப்பு தொழுகையில் ஏனாம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியை சேர்ந்த இஸ்லாமியர்கள் கலந்து கொண்டு தொழுகை நடத்தி, ஒருவருக்கு ஒருவர் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டதாக எமது ஏனாம் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

வானிலை (12)

தென்னிந்திய பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு பகுதிகளில் கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுவதாலும், தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளின் மேல் ஒரு வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதாலும், தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாளை மறுநாள் தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. கோவை மாவட்ட மலைப் பகுதிகள், தென்காசி, விருதுநகர், தேனீ மற்றும் திண்டுக்கல் ஆகிய 5 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஐபிஎல் (5)

ஐபிஎல் 20-20 கிரிக்கெட் போட்டியில் இன்றிரவு 7.30 மணிக்கு மும்பையில் நடைபெற உள்ள ஆட்டத்தில் மும்பை இண்டியன்ஸ் அணி-கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை எதிர் கொள்கிறது. நேற்று

கவுகாத்தியில் நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை ராஜஸ்தான் ராயல்ஸ் அணி 6 ரன் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றது.

*கொடைக்கானல்* (9)

மலைகளின் இளவரசி என அழைக்கப்படும் கொடைக்கானலில் வாகன கட்டுப்பாடு தொடர்பாக நீதிமன்றம் அண்மையில் விடுத்த உத்தரவின்படி, நாளை முதல் கொடைக்கானலுக்கு வார நாட்களில் 4 ஆயிரம் சுற்றுலா வாகனங்களும், வார இறுதி நாட்களில் 6 ஆயிரம் சுற்றுலா வாகனங்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட உள்ளது. மேலும், கொடைக்கானல் மலைப்பகுதியில காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை கனரக வாகனங்கள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது.

இ-பாஸ் பெற்ற வாகனங்களுக்கு மட்டுமே நாளை முதல் அனுமதி வழங்கப்படுவது குறிப்பிடப்பட்டது.

*சத்தீஸ்கர்* (8)

சத்தீஸ்கர் மாநிலம் தண்டேவாடா மாவட்டத்தில் இன்று அதிகாலை முதல் பாதுகாப்பு படையினர் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளை தேடும்

பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். பாதுகாப்பு படையினரை நோக்கி தாக்குதல் நடத்திய மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் மீது பதில் தாக்குதல் நடத்திய போது பெண் மாவோயிஸ்ட் ஒருவர் கொல்லப்பட்டார். அந்த பெண்ணின் உடலை கைப்பற்றியதுடன், அவர் வைத்திருந்த துப்பாக்கி மற்றும் வெடிபொருட்களையும் பாதுகாப்பு படையினர் கைப்பற்றி உள்ளனர். அப்பகுதியில் தேடுதல் வேட்டை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.